**அம்பலாங்கொடை பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 ஜூன் 14 திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து அம்பலாங்கொடை பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை நிதியத்தில் இருந்து நிறைவேற்றுவதற்காக உத்தேசித்திருந்த 15 நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காத போதிலும் அதற்குரிய மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 7,500,000 தொகைக்காக கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத் தொகை ரூபா 908,496 இற்கான 03 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளின் மீதிகளிடையே ரூபா 251,445 இற்கான வித்தியாசம் காணப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீண்ட காலமாக காணப்படும் சமமின்மைகள் என்பதால் எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) பெற வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2008 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்பட்டுள்ள ரூபா 47,466 தொகைக்கான பெற வேண்டிய வைப்புக் கணக்கு மீதியை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெற வேண்டிய தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**(ஈ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப் படாமையால் கூட்டுத்தொகை ரூபா 155,217,382 தொகைக்கான 06 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி ரூபா. | இணக்கமின்மை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 174(ii) | 135,427 | ஸோபா ஒன்று கொள்வனவு செய்வதற்காக கூறுவிலை அழைத்தல் அல்லது பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடம் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் நடவடிக்கை எடுப்பேன். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | | |
| (i) | நிதிப் பிரமாணங்கள் 101 முதல் 113 வரை | 18,200 | சபைக்குச் சொந்தமான பொது நூலகங்களில் பேணப்படுகின்ற சேர்வுப் பதிவேட்டின் பிரகாரம் 123 காணா மல் போயுள்ள புத்தகங்கள் தொடர் பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங் களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | நிதிப் பிரமாணம் 570, 571 மற்றும் 572 | 16,815,575 | 02 வருட காலத்தை மிகைத்துள்ள வைப்பு மீதிகள் தொடர்பாக விபரங்கள் ஒன்று காணப்படாததுடன் குறிப்பிட்ட பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங் களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (அ) | 2015 ஜூலை 10 ஆந் திகதிய 02/2015 இலக்கங் கொண்ட நிதி அமைச்சுச் சுற்றறிக்கை | 750,000 | சபையின் கப் வண்டி யை அப்புறப்படுத்து வதற்காக அறிக்கை கள் பெறப்பட்டு ஒரு வருடத்தை விட மிகையான காலம் கடந்திருந்த போதிலும் அப்புறப்படுத்தி இருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 14,316,879 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 18,607,197 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2018 மதிப்பீட்டு வருமானம் | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பீட்டு வருமானம் | 2017 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப்பட்ட வருமானம | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| ஏக்கர் வரி | 58,850 | 15,600 | 3,517 | 225,089 | 18,000 | 16,325 | 3,879 | 213,006 |
| வாடகை | 3,555,350 | 2,502,360 | 3,003,751 | 60,306 | 2,600,000 | 2,300,060 | 1,781,705 | 561,697 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,382,300 | 1,559,650 | 958,730 | 712,895 | 1,600,000 | 1,328,260 | 1,216,285 | 111,975 |
| | 4,996,500 | 4,077,610 | 3,965,998 | 998,290 | 4,218,000 | 3,644,645 | 3,001,869 | 886,678 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக அறவிடப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 4,964,288 தொகை எனினும், சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 3,965,998 தொகை ஆக காணப்பட்டமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 998,290 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் பாதீட்டின் பிரகாரம் வருமானம் விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.3 ஏக்கர் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டிய ஏக்கர் வரி வருமானம் ரூபா 228,606 தொகையாக இருந்த துடன் ஆண்டின் போது அறவீடுகள் ரூபா 3,517 தொகையாக காணப்பட்ட மையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 225,089 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. ஏக்கர் வரி நிலுவை மீதி வருடாந்தம் அதிகரித்துக் காணப்பட்டதுடன் நிலுவை மீதியை அறவீடு செய்வதற்காக முறையான வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | முறையான வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு நிலுவையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டிய வருமானம் ரூபா 1,671,625 தொகை எனினும், சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 958,730 தொகை அதாவது 61 சதவீதமாகக் காணப்பட்ட மையால் அனுமதிப்பத்திரக் கட்டண அறவீடு திருப்திகர மட்டத்தில் காணப்படவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானம் அறவிடுவேன். |

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 6,826,562 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 47,114,680 தொகை பெறவேண்டி இருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | பிரதான செயலாளரிடம் நிலுவைத் தொகையை பெற்றுக்கொள்வதற்காக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| விதிக்கப்பட்டிருந்த துணை விதியின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் தொடர்பாக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

#### (ஆ) எதிர்பார்த்த நலன்கள் பெற்றுக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| படபொல இரண்டு மாடிக் தொடர் கட்டிடத்தின் 14 கடைகளுக்காக பிரதான பெறுமதி மதிப்பீட்டாளர் வழங்கியிருந்த புதிய பெறுமதி மதிப்பீட்டின் படி 2015 பெப்ரவரி 09 ஆந் திகதி முதல் மாதாந்தம் ரூபா 57,400 இற்கான தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 7,700 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தமையால் மாதாந்தம் ரூபா 49,700 இற்கான நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது. | உடன்படிக்கையை நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்து பெறுமதி மதிப்பீட்டு பெறுமதியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 20 ஆந் திகதிய 2015/53 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் படி குப்பை முகாமைத்துவ அலுவல்களை முறைப்படுத்துவதற்காக சபை நீண்டகாலத் திட்டம் தயாரித்திருக்கவில்லை. | குப்பைகளை அகற்றுவதற்காக முறையான மற்றும் நீண்டகால வேலைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகலாவிய சுட்டிகள் மூலம் சபையின் அதிகாரப் பிரசேத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்திக் கான நீண்ட காலத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பொது மக்களின் வாழ்க்கை நிலை உயர்த்த வேண்டும். | அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக எதிர்காலத்தில் திட்டம் ஒன்று தயாரிக்கின்றேன். |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இரண்டாம் மட்டத்தைச் சேர்ந்த 08 உத்தியோகத்தர்களின் மிகையும் மற்றும் இரண்டாம் மற்றும் மூன்றாம் மட்டங்களை சேர்ந்த 08 பதவிகளில் வெற்றிடங்களும் காணப்பட்டன. | மிகைப் பதவிகளை முறைப்படுத்துவதற்கும் வெற்றிடங்களுக்காக முறைப்படி ஆட்சேர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) ஊழியர் கடன்**

| | | |
|---|---|---|
| 1997 ஆண்டு முதல் காணப்படும் சேவையில் இருந்து ஓய்வு பெற்ற, வெளிநாடு சென்றுள்ள, சேவை வரிதாக்கிய மற்றும் இறந்த 12 ஊழியர்களிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 197,600 தொகைக் கான, ஊழியர் கடன் மீதி குறிப்பிட்ட உத்தியோகத்தர்களிடம் அல்லது அவர்களின் பிணையாளர் களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைக் கடன் மீதி அறவிடப்பட வேண்டும். | நிலுவைக் கடன் மீதி எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.3 நட்டங்கள் சேதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டின் போது நிர்மாண வேலை ஒன்றிற்காக ஒப்பந்தக் கம்பனிக்கு வழங்கியிருந்த தார் தொடர்பாக பெற வேண்டிய தொகை அதனது சிட்டைகளில் இருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் மீளாய்வண்டு இறுதியில் உள்ளவாறு தொடர்ந்தும் ரூபா 2,791,487 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | குறிப்பிட்ட பணம் விரைவாக அறவிடப்படும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 செலவு விடயங்களின் கூட்டுத் தொகை ரூபா 1,466,291 தொகைக் கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந் ததுடன் அவை 20 சதவீதம் முதல் 26 வரை இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இது தொடர்பாக கவனம் செலுத்துவேன். |
| (ஆ) | ஒரு வருமான விடயத்தினை நெருங்கியிருக்காத இலக்காகிய வருமானம் ரூபா 892,390 தொகை அதாவது 25 சதவீதமாக இருந்தது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இது தொடர்பாக கவனம் செலுத்துவேன். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 இன் மற்றும் உள்ளுராட்சி ஆணையாளரின் (தென்மாகாண) 2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/நா.ச.லே கொண்ட உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்திருந்த போதிலும், போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | நிதிப் பிரமாண ங்கள் மற்றும் சுற்றறிக்கைகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுப்பேன். |

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2009 ஜுன் 09 ஆந் திகதிய DMA/2009(i) இலக்கங் கொண்ட முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் நியமிப்பதற்காக மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |